on Land) Third Amendment Bill, 1972, and the Tamil Nadu Land **Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill** 1972.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker transmitting copies of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972, and the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1972, as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

3. தகவல் கோரல்

இரண்டாவது ஊதியக் குழு சம்பந்தப்பட்ட தனி நபர் குழுவின் அறிக்கை குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, தனி நபர் குழுவின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் சிலவற்றை முதலமைச்சர் அவர்கள் அவையிலே அறிவித்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட அறிக்கைகள் மன்றத்தின் உறுப்பினர்கள் பார்வைக்காக விரைவில் வைக்கப்படுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : யாரைக் கேட்கிறீர்கள் ? (சிரிப்பு). "கொஸ்டின்" எல்லாம் முடிந்துபோய்விட்டதே !

திரு. செ. முத்துசாமி : "கிளாரிபிகேஷன்"

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : கிளாரிபிகேஷன் யாரைக் கேட்கிறீர்கள் ? எந்த அமைச்சரைக் கேட்கிறீர்கள் ?

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சரைக் கேட்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி எழுந்தார்.........)

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : இப்போது கேட்கக்கூடாது. தனியாகக் கேள்வி போடுங்கள்.

திரு. செ. முத்துசாமி : கிளாரிபிகேஷனுக்காகக் கேட்கிறேன். அவையில் ஒரு அறிக்கைமீது முடிவு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த

அறிக்கை சட்டமன்ற உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப் படுமா என்று தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரவர்களிடம் விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : அறிக்கை சபையில் வைக்கப் படுமா என்று கேட்கிறீர்கள். "சீப் மினிஸ்டர்" படித்ததால், அவர் வரும்போது விளக்கம் கிடைக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு ஆங்கிலப் புலமை இல்லாததால் அந்த அறிக்கையையும், எந்தச் சட்டத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழிலேயே வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : நடவடிக்கைகள் தமிழிலே தான் இருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, சட்டம் புரியாமல் உறுப்பினர்கள் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழில் வைக்கச் செய்வோம்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேலவைத் தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இச்சட்ட வரைவைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட இணை ஆய்வுக் குழு இம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைமையிடங் களில் 15 முறை கூடி தனது அறிக்கையைப் பேரவைக்கு அனுப்பி யுள்ளது. பதிவான சாட்சியங்களையும், சம்பந்தப்பட்ட தரப்பினர் கள் அனுப்பிய எழுத்து மூலமான முறையீடுகளையும் பரிசீலித்த

@ 400–407 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.